காப்பாற்றுவார்கள் என்ற நிலைமை போய் படிப்படியாக அப்படிப்பட்ட நிலைமைகள் போய், என்ன என்ன எடுக்கலாம், எப்படி எப்படி எடுக்கலாம், எப்படிப்பட்ட வசதிகளை எட்டிப் பிடிக்கலாம் என்ற நிலைமை வந்துவிட்டது. அது மட்டுமில்லாமல் ஊரிலே மாச்சரியங்கள் வந்து, வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற நிலைமைகளும் வருகின்ற காரணத்தால் அவர்களை மற்ற மற்ற ஊர்களுக்கு மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எப்படி மற்ற, மற்றத் துறைகளிலே பணியாற்றுகின்ற பல்வேறு ஊழியர்கள் அவர்களுடைய சொந்த ஊரிலே இருந்தால் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுவார்கள், உற்றார் உறவினர்களுக்குச் சலுகை காட்டுவார்கள், சொந்தக்காரர்களுக்கு சலுகை காட்டுவார்கள் என்று கருதி மற்ற, மற்ற ஊர்களுக்கு மாற்றப் படுகின்ற விதிமுறைகள் இருக்கின்றனவோ அந்த அடிப்படையிலே இந்த கிராம அதிகாரிகளுக்கும் வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட காரணங்களுக்காகத்தான் சொந்த ஊரை விட்டு, மற்ற ஊர்களில் அவர்கள் பணியாற்றுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல. மற்ற மற்றத் துறைகளிலே இருப்பவர்கள் எப்படி அவர்களுடைய கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து விரைவிலே தேவையான விவரங்களைத் தெரிந்துகொள்கிறார்களோ, புரிந்துகொண்டு பணியாற்றுகிறார்களோ அதைப்போன்று இவர்களும் தெரிந்துகொண்டு, புரிந்துகொண்டு பணிகளைச் செய்ய வேண்டும்.

அரசு நிலங்களிலுள்ள தனியார் பனைமரங்களுக்குத் தீர்வை.

22—(*வினா எண் 8310) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்** : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நிலங்களில் உள்ள தனியார் பனை மரங்களுக்கு (2C பட்டா மரங்களுக்கு) விதிக்கப்படும் தீர்வை ரூபாய் ஒன்றாக உயர்த்தப்பட்டுள்ளதால் ஏழைகள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) எந்த அடிப்படையில் தற்போது விதிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஏழைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசு கருதும் வாய்ப்பு ஏதும் எழவில்லை.

(ஆ) தேங்காய், மா, புளி ஆகிய பொருள்களின் சந்தை விலை வெகுவாக உயர்ந்திருப்பதன் காரணமாக அம்மரங்களின் 2சி மரத்தீர்வையை உயர்த்துவதன் மூலம் அரசுக்கு கூடுதல்

வருவாயும், அதன் மூலம் ஊராட்சி ஒன்றியத்துக்கு பொருளாதார முன்னேற்றம் ஏற்படவும் வாய்ப்புள்ளது என்று தமிழ்நாடு மாநில கணக்காயர் கருத்துத் தெரிவித்ததன் பேரில் பலதரப்பட்ட மரங்களுக்கு மரவரி இரட்டிப்பாக்கி நிர்ணயிக்கப்பட்டது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தென்னை, மா, புளி போன்ற மரங்களுக்கு வருமானம் அதிகரித்திருக்கிறது. ஆகையால் வரியை உயர்த்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் பனை மரத்தின் வருமானம் அந்த அளவுக்கு உயரவில்லை. பனைகளிலே ஆண் பனை என்றும் பெண் பனை என்றும் உண்டு. பெண் பனைகளிலிருந்து ஓலை, நுங்கு, இதரப்பொருள்கள் கிடைப்பதால் வருமானம் சற்று கூடுதலாக கிடைத்தாலும் ஆண் பனைகளிலிருந்து அந்த அளவுக்கு வருமானம் கிடைப்பதில்லை. ஆண்டுக்கு ஒன்றரை ரூபாய்க்குமேல் ஒரு பனைமரத்திலிருந்து வருமானம் வருவதில்லை. ஒரு தடவை ஒரு பனை மரத்தில் ஏறுவதற்கு மட்டும் எட்டு அணா கூலி வாங்குகிறார்கள். மொத்தத்தில் ஒரு ரூபாய்க்கும் குறைவாகவே ஒரு பனை மரத்திலிருந்து வருவாய் வருவதால், இன்றைக்கு 2-சி பட்டா வைத்திருப்பவர்கள் இந்த வரி உயர்வினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஆறு பைசாவாக இருந்த வரியை இன்றைக்கு திடீரென்று ஒரு ரூபாயாக உயர்த்தியிருப்பது சரியல்ல, இதைக் குறைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பனை ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 50 காசு வரி இருந்தது. இப்போது அது ஒரு ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. பனை மட்டைகளை விசிறி பண்ணி விற்றாலே அதிகமான வருமானம் வரும். பனை மரத்தைப் பார்த்தால் அநேகமாக எல்லா மட்டைகளையும் சீவிவிட்டு, சிண்டு வைத்த மாதிரி இரண்டே இரண்டு மட்டைகளைத்தான் விட்டுவைத்திருப்பார்கள். அவர்களுக்கு கட்டுப்படி ஆகவில்லை என்றால் விட்டுவிடலாம்; மற்றவர்களுக்கு தர அரசு தயாராக இருக்கிறது.

திரு. டி ஆர். வேங்கடரமணன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பனை ஓலை மூலமே வருமானம் அதிகமாக வரும் என்று சொல்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் ஒரு பனை ஓலையை பத்து காசுக்குத்தான் வாங்குகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக விசாரித்துப் பார்த்தால் கூட இந்த உண்மை தெரியும். ஒரு பனை மரத்திலிருந்து ஆண்டுக்கு சுமார் பத்து ஓலைகள்தான் வெட்டுகிறார்கள். அதனால் ஒரு பனை மரத்திலிருந்து ஒரு ரூபாயும் அதற்குக் குறைவாகவுந்தான் வருமானம் கிடைக்கும். அந்த ஓலையை விசிறியாகச் செய்து விற்றால் நல்ல வருமானம்

வரும் என்று சொன்னார்கள், அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த வருமானம் இடையிலே இருக்கின்ற இடைத்தரகர் களுக்குத்தான்போகிறதே தவிர 2-சி பட்டா வாங்கியவர்களுக்குக் கிடைக்'வில்லை. ஏற்கெனவே மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் 6 பைசாவாக இருந்த வரி, 50 பைசாவாக உயர்த்தப்பட்டு, இப்போது, ஒரு ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வருமானமே ஒரு ரூபாய்தான் வருகிறது என்ற காரணத்தால் இந்த வரியைக் குறைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக 50 காசாக இருந்தது இப்போது கடந்த பத்தாண்டு காலத்திற்குள் ளாகப் பார்த்தால் 4 மடங்காக எல்லாப் பொருள்களின் விலை களும் ஏறியிருக்கின்றன. ஒரு ஆண்டிற்கு 365 நாட்கள், 12 மாதங்கள். அதிலே ஒரு பனை மரத்திலிருந்து 1 ரூபாய் தான் வருமானம் வருகிறது. அதை நம்பித்தான் ஒரு ஏழை வாழ் கிறான் என்று சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. அவர் களால் வாழ முடியாவிட்டால், அந்தப் பனை மரத்தை விட்டு விடுவது நல்லது. அதை மற்றவர்களுக்குக் கொடுக்கலாம் இல்லாவிட்டால் காதி வில்லேஜ் இன்டஸ்ட்ரீஸ் இலாகா அந்த மரங்களை எல்லாம் எடுத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2—சி பட்டாவிற்கான வரி ஒரு மடங்குதான் உயர்ந்திருக் கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார் கள். மாநிலத்தில் பல மடங்கு பலன் தருகிற புளிய மரங் களும், தென்னை மரங்களும் தற்போது இன்னும் கூடுதலாக பலன் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. குறைந்தபட்சம் புளிய மரம் ஒன்று ஆண்டுக்கு 200 ரூ. வருமானம் கொடுக் கிறது. அதேபோல தென்னை மரம் எவ்வளவுதான் மோசமான பலன் தருகிற மரமாக இருந்தாலும் கூட ஆண்டுக்கு 75 ரூபாயாவது கொடுக்கிறது, அரசின் வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளைப் பார்க்கும்போது இந்த வருவாயை உத்தேசித்தாவது இன்னும் கூடுதலான வரியை இது போன்ற மரங்களுக்கு விதிப்பதற்கு அரசு மேலும் பரிசீலிக்குமா? அதே போல யாரும் பாதுகாக்கத் தேவை யில்லாத புளியமரம் போன்றவைகளை சில தனிப்பட்டவர்கள், 500 மரங்கள் ஆயிரம் மரங்கள் என்று எடுத்து 2-சி பட்டா வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட 2-சி பட்டா கொடுப்பதற்கும் ஒரு உச்சவரம்பு ஏற்படுத்த அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொல்லிய யோசனை மிக சீரிய யோசனை. நல்ல யோசனை. இதன் மூலம் வருவாய் அரசுக்கு அல்ல, பெரும் தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போகிறது. இப்போது ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் நிதி வசதி இல்லை என்று தவித்துக் கொண்டிருக்கிற நிலையில் இப்படி வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு வசதிகள் கிடைப்பது நல்லது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியதைப் போல இப்போது புளிய மரங்களுக்கு 6 ரூபாய் தான் விதிக்கிறோம். மாமரத்திற்கும் 6 ரூபாய். பலா மரத்திற்கு 6 ரூ. தென்னை மரத்திற்கு 8 ரூபாய் விதிக்கிறோம். அவர்கள் சொல்லியது மாதிரி உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. இரண்டு தேங்காய்களின் விலையே 8 ரூபாய்க்கு வருகிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது, இந்த வரிகளைக் கூடுதலாக ஆக்குவது, அரசுக்கு கூட அல்ல, நிதித் துறைக்கு, நிதியமைச்சருக்கு கூட அல்ல, ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக பலன், வருவாய் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கூறிய யோசனையை மனத்திலே வைத்துக் கொண்டு இதற்கு என்ன செய்யலாம் என்பதை அரசு யோசிக்கும்.

நத்தம் தொகுதி சானார்பட்டி ஒன்றியத்திலுள்ள எமக்கலாபுரம் கிராம விவசாயிகள் கட்டும் தண்டத்தீர்வை.

23 (*வினா எண் 6922) **திரு. மெ. ஆண்டிஅம்பலம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம், எமக்கலாபுரம் கிராமத்தின் அயன் சர்வே நெ. 594–ல் ஏக்கர் 104–ம் சென்ட் 99–ம் கொண்ட அரசு தரிசு நிலத்தில் நிலமற்ற ஏழை விவசாய மக்கள் தலா 2 ஏக்கர் வீதம் விவசாயம் செய்து, தண்டத்தீர்வையைப் பல வருடங்களாகக் கட்டி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அவர்களுக்கு பட்டா வழங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் வட்டம், எமக்கலாபுரம் கிராமம் புல எண் 594 இல் உள்ள 104.99 ஏக்கர் நிலங்கள் தலா 2 ஏக்கர் வீதம் விவசாயிகளின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பில் இல்லை. அந்நிலங்கள் விவசாயத்திற்கு லாயக்கற்ற நிலங்களாக இருப்பதால் ஒப்படை செய்வதில் யாருக்கும் பயனிருக்காது.